செ.வெ. எண் : 40 நாள் : 20.1.2009

<u>பத்திரிகைக்கான செய்தி</u>

## இளம் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம்

## பள்ளி சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்

<u>**விளக்கக் குறிப்புரை**</u>

தமிழகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் 85வது பிறந்த நாளான 03.06.2008 முதல் மாண்புமிகு தமிழக முதல்வரின் பள்ளி சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மனித உடம்பில் முக்கிய பணியைச் செய்யும் இருதயத்தின் குறைபாடுகளைக் களைந்து, பள்ளி சிறார்களின் ஆரோக்கிய வாழ்விற்கு உத்திரவாதம் அளிக்கும் "பள்ளி சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்" மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டம், பள்ளி மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

"வாழ்வொளித் திட்டம்" என அழைக்கப்படும் பள்ளி நலத் திட்டம் தமிழகத்திலுள்ள 40,308 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் மூலம் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 9986 மாணவர்களுக்கு இருதயக் குறைபாடுகள் உள்ளதாக கண்டறியப்பட்டு, சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட குழு பரிசோதித்து 2398 மாணவர்கள் இருதய அறுவை சிகிச்சைக்குத் தகுதியானவர்கள் எனக் கண்டறியப்பட்டனர்.

அரசு மருத்துவமனைகளில் இருக்கும் வசதிகளைக் கொண்டு கண்டறியப்பட்ட அத்தனை பேருக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்திட நீண்ட காலம் ஆகலாம் என்பதை கருத்தில் கொண்டு தனியார் மருத்துவமனைகளின் மூலம் விரைவாக அறுவை சிகிச்சை செய்து இளம் பிஞ்சுகளின் இன்னுயிர்க் காக்க, கீழ்க்கண்ட 17 தனியார் மருத்துவமனைகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெறப்பட்டது. —

அரசு மருத்துவமனைகளில் இருக்கும் வசதிகளைக் கொண்டு கண்டறியப்பட்ட அத்தனை பேருக்கும் இருதய அறுவை சிகிச்சை செய்திட நீண்ட காலம் ஆகலாம் என்பதை கருத்தில் கொண்டு தனியார் மருத்துவமனைகளின் மூலம் விரைவாக அறுவை சிகிச்சை செய்து இளம் பிஞ்சுகளின் இன்னுயிர்க் காக்க, கீழ்க்கண்ட 17 தனியார் மருத்துவமனைகளிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் பெறப்பட்டது.

1. ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனை, போரூர், சென்னை – 116
2. அப்பல்லோ மருத்துவமனை, சென்னை – 6.
3. ப்ரான்டியர் லைப் லைன் மருத்துவமனை, சென்னை – 101
4. ஹார்வே ஹெல்த் கேர் லிமிடெட் மருத்துவமனை, சென்னை – 18
5. மெட்ராஸ் மெடிகல் மிஷன், சென்னை – 37
6. கே.ஜே. மருத்துவமனை, சென்னை – 84
7. சூரியா மருத்துவமனை, சென்னை – 93
8. மியாட் மருத்துவமனை, சென்னை – 89
9. லைப் லைன் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, சென்னை – 96
10. செட்டிநாடு மருத்துவமனை மற்றும் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், கேளம்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்
11. வடமலையான் மருத்துவமனை, மதுரை
12. அப்பல்லோ மருத்துவமனை, மதுரை
13. மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, மதுரை
14. கே.ஜி. மருத்துவமனை மற்றும் போஸ்ட் கிராஜ்வேட் மெடிக்கல் இன்ஸ்ட்டிடியூட், கோயம்புத்தூர்
15. ஜி. குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனை, கோயம்புத்தூர் – 18
16. ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை, கோயம்புத்தூர்
17. பி.எஸ்.ஜி. மருத்துவமனை, கோயம்புத்தூர்

தற்போது இத்திட்டத்தில் கீழ்காணும் மூன்று மருத்துவமனைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன.

1. பில்ரோத் மருத்துவமனை, 43, லஷ்மி டாக்கீஸ் ரோடு, ஷெனாய் நகர், சென்னை – 30

2. காவேரி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனை, தென்னூர், திருச்சி – 17

3. விநாயகா மிஷன் மருத்துவமனை, சங்ககிரி மெயின் ரோடு, என்.எச்.47, வீரபாண்டி (போஸ்ட்), சேலம் – 636 308

இத்திட்டத்தில் தமிழக அரசு மூடிய எளிய இருதய அறுவை சிகிச்சைக்கு ரூ.10,000/– ஆகவும், திறந்த எளிய இருதய அறுவை சிகிச்சைக்கு ரூ.30,000/– ஆகவும், சிக்கலான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000/– ஆகவும் நிதி உதவி வழங்கியது.

இந்த நிதி போதவில்லை என்று இம்மருத்துவமனைகள் அரசிற்கு தெரிவித்து மூடிய அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/– ஆகவும், திறந்த எளிய இருதய அறுவை சிகிச்சைக்கு ரூ.50,000/– ஆகவும், சிக்கலான திறந்த அறுவை சிகிச்சைக்கு ரூ.1,00,000/– கோரியிருந்தனர். அரசு இக்கோரிக்கையை ஏற்று மூடிய எளிய இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– ஆகவும், திறந்த எளிய அறுவை சிகிச்சைக்கு ரூ.30,000/– லிருந்து ரூ.50,000/– ஆகவும், சிக்கலான திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000/– லிருந்து ரூ.1,00,000/– ஆகவும் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

இந்த நிதி உதவி உயர்வினை இருதய குறைபாடுள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள துணை இயக்குநர், சுகாதாரப் பணிகளை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர் 30/12/07
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்து துறை, சென்னை – 6.

30/12/07



மக்கள் தொடர்பு அலுவலர், இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9